முருகப்பெருமான் துணை

**மகான் திருவள்ளுவர் அருளிய அறிவுரை ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**17.07.2023**, திங்கட்கிழமை

1. அவதார ஞான வள்ளலே
   ஆற்றல் மிக்க ஞானவான்களை
   அவனியெங்கும் படை திரட்டியே
   ஆக்கம்தர அருளுகின்ற அரங்கனே
2. அரங்கனே உன் பெருமை கூறி
   அகிலமதில் சோபகிருது நள்ளி திங்கள்
   வரமென முதல் திகதி சோமவாரம்
   (சோபகிருது வருடம் ஆடி மாதம் 01 ம் நாள், 17.07.2023, திங்கட்கிழமை)
   வழங்குவேன் அறிவுரை ஆசி தன்னை
3. தன்னையே திருவள்ளுவர் யானும்
   தரணி பாதுகாப்புற உரைப்பேன்
   நன்மைதரும் மெய்ஞானமதை
   ஞானதேசிகன் அறமாக வரமாகத் தர
4. தருகவே கலியுக மக்கள்
   தக்கபடி வணங்கி ஆசி
   முருகா என ஏற்று வருக
   முழுமை ஞானம் அடையும் வண்ணம்
5. வண்ணமுடன் தரும வேலியை
   வகுத்து வளர்த்து வருக
   எண்ணமதில் அன்னதான சேவை
   ஏற்று மக்கள் செய்துவர
6. வருகவே வளர்ச்சி காணும்
   வந்தடையும் எல்லாம் மாற்றமாக
   முருகப் பெருமான் அனுகூலமுடன்
   முழுமை தனை உலகோர் அடைந்து

7. அடைந்துமே ஞானவான்களாக
ஆற்றல்பட வாய்மை நிறைந்த
சோடையிலா மேன்மக்களாக
சுருதிபடி அவரவரும் உயர்ந்து நிற்பர்
8. நிற்கவே அரங்கன் பலம்
நீதிவழி உலகெல்லாம் நிரம்ப
அற்புதம் கலியுகம் தன்னில்
அரங்கன் வேதத்தால் நடக்கும்
9. நடக்கவே ஞானமும் தவமும்
நன்மை தரும் அன்னதானமும்
தடையற மகான் வரமாக்கி
தந்து காப்பேனென அருளிவர
10. வருங்காலம் தொடரும் மக்கள்
வையகம் தன்னை காப்பதுடன்
பெருங்கருணை கொண்டதொரு
பேராற்றல்மிக்க தலைமை படைத்து
11. படைத்து உலகினில் நல்லாட்சி
பண்பான மக்களை கொண்ட
இடரில்லா ஞான ஆட்சித் தருவர்
இயம்பிய அறிவுரை ஆசி முற்றே

—சுபம்—